முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 107/2018

**வாதி தரப்பு சாட்சி-1 முருகவேல் திரு.M.கோபிநாத் பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) என் தகப்பனாரின் தந்தை பெயர் ரெங்கம நாயக்கர் என்றால் சரிதான். ரெங்கம நாயக்கருக்கு என் தகப்பனார் மற்றும் தம்மா நாயக்கர், பெருமாள் நாயக்கர், கொண்டம நாயக்கர் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். என் தந்தையுடன் பிறந்த சகோதரிகள் நான்கு பேர். அவர்கள் என் தாத்தா காலத்திலேயே திருமணமாகி சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். தம்மா நாயக்கர் மனைவி பெயர் பழனியம்மாள் என்றால் சரிதான். பெருமாள் நாயக்கர் மனைவி பெயரும் பழனியம்மாள் என்றால் சரிதான். என் தாயார் பெயர் சீலம்மாள். ஆரம்பத்தில் என் தகப்பனார்தான் இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றும், அவர்இறந்த பின்னிட்டு வாரிசு அடிப்படையில் நாங்கள் சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். என் தாயார் இவ்வழக்கின் இரண்டாம் வாதி என்றால் சரிதான். தம்மா நாயக்கரின் வாரிசுகள் தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

2) பெருமாள் நாயக்கர் வாரிசுகள் தான் 6 முதல் 14 பிரதிவாதிகள் என்றால் சரிதான். கொண்டம நாயக்கர் வாரிசு தான் இவ்வழக்கின் 15 ம் பிரதிவாதி என்றால் சரிதான். பெருமாள் நாயக்கர் பழனியம்மாள், என் தாயார் மற்றும் தம்மா நாயக்கர் மனைவி பழனியம்மாள் மூவரும் சேர்ந்து 19.10.1987 ல் சர்வே எண்.1574/1 ல் 79 செண்ட் நிலத்தை கொண்டமநாயக்கரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். அந்த கிரையம் ஆவணம் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் பதிவு நகல் பி.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.சா.ஆ-1 ஆவணத்தில் கண்ட 79 செண்ட் நிலத்திற்கு வடபுறம் தான் தாவா சொத்தும், ஓட்டுவில்லை வீடும், அதையடுத்து கூரை வீடும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுவில்லை வீட்டில்தான் பெருமாள் நாயக்கர் மகன் ரெங்கசாமி குடியிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் அந்த வீடு அனைவருக்கும் பொதுவான வீடாகும்.

3) கூரைவீட்டில்தான் நான், என் தகப்பனார் அனைவரும் வசித்தோம் என்றும், தற்போது வேறு இடத்திற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். ஓட்டுவில்லை வீட்டிற்கு பெருமாள் நாயக்கர் பெயரில் மின் இணைப்பு எண்.60 உள்ளது என்றும், கூரை வீட்டிற்கு என் தகப்பனார் பெயரில் மின் இணைப்பு எண்.191 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1571/2 மற்றும் 1571/7 ஆகியவற்றில் நாங்கள் வீடு கட்டி குடியிருக்கிறோம்த என்றால் சரிதான். மேற்படி நிலம் என் தகப்பனார் பழனிச்சாமியும், கொண்டம நாயக்கரும் தனிப்பட்ட

முறையில் கிரையம் பெற்றது என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கான பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கு மேற்கே பெருமாள் நாயக்கரும், தம்மா நாயக்கரும் கிரையம் வாங்கிய நிலம் உள்ளது என்றால் சரிதான். அதன் பட்டா எண்.1466 என்றால் பட்டா எண் தெரியாது.

4) மேற்படி பட்டா பெருமாள் நாயக்கர் மற்றும் தம்மா நாயக்கர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆழ்துளை கிணறு அமைத்துள்ள இடத்திற்கு பட்டா தம்மா நாயக்கர் பெயரில் உள்ளது என்றால் அனைவருக்கும் கூட்டான இடம் ஆனால் பட்டா தம்மாநாயக்கர் பெயரில் உள்ளது. மேற்படி இடத்தின் மின் இணைப்பும் தம்மா நாயக்கர் பெயரில் இருந்தும், அவர் இறந்த பின்னிட்டு அவரது மகன் தங்கவேல் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுவில்லை வீடு மற்றும் கூரை வீட்டிற்கு வடபுறம் சர்வே எண்.1573/9 நிலம் உள்ளது என்றால் சரிதான். என் தாயார் கிரையம் பெற்ற நிலத்தில் நான்கெல்லையாக தம்மா நாயக்கர், பெருமாள் நாயக்கர், பழனிச்சாமி நாயக்கர் இவர்கள் நிலத்திற்கு தெற்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1573/9-ல் 79 செண்ட் நிலத்தினை மேற்கே தம்மா நாயக்கர், நடுப்பகுதி பெருமாள் நாயக்கர், கிழக்கே பழனிச்சாமி ஆகியோருக்கு என வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு ஒரு வாய்மொழி பாகமே ஏற்படவில்லை.

5) சர்வே எண்.1573/9 நிலத்தினை கொண்டம நாயக்கர் மேற்குபுறமாக சிறிது நாட்கள் தனியாக அனுபவித்தாரா என்றால் இல்லை. கொண்டம நாயக்கர் தன் மகளான 15ம் பிரதிவாதிக்கு 26.05.2011ல் அவருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் நான்கில் ஒரு பாகத்தை எழுதிக்கொடுத்துள்ளார்.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**